சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 23.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **54/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | பழனிச்சாமி |
| தந்தை பெயர் | : | சோழியப்பன் |
| கிராமம் | : | திருச்சி |
| தாலுக்கா | : | திருச்சி |
| தொழில் | : | காவல் உதவி ஆணையர்,<br>திருச்சி |
| வயது | : | |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருச்சி மாநரகம், உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.08.2019 ம் தேதி திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல் துணை

கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது, மேற்படி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த பாலசுப்பிரமணியன் என்பவர் நிலைய மனு எண் 411/2019 ஐ விசாரித்து, மேற்படி திருத்துறைப்பூண்டி காவல் நிலைய குற்ற எண் 357/2019 ச/பி. 448, 294 (b), 506 (i), 323 மற்றும் 3 (1) (r), 3(2)(va) of SC/ST (PoA) Act ன்படி பதிவு செய்யப்பட்டிருந்த இவ்வழக்கினை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்னை அ.சா.ஆ.10 ஆன செயல்முறை ஆணை கடந்த 05.08.2019 ம் தேதியன்று புலன் விசாரணை செய்ய வேண்டுமென உத்தரவிட்டதை தொடர்ந்து, வழக்கினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். எதிரிகளுக்கும் சாட்சிகளுக்கும் ஜாதி சான்றிதழ்கள் கோரி, திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் அ.சா.5 ராஜன்பாபு, தனி வட்டாட்சியர் அ.சா.6 செந்தில்குமார் ஆகியோர்களிடம் வேண்டுகோள் கடிதம் அனுப்பியும், 19.09.2019 ம் தேதியன்று அ.சா.1 அமுதாவிற்கு வழங்கப்பட்ட அ.சா.ஆ.4 ஜாதி சான்றிதழை பெற்றுள்ளேன். 1வது எதிரி சாந்திக்கு வழங்கப்பட்டஅ.சா.ஆ.5 ஜாதி சான்றிதழை பெற்றுள்ளேன். திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் அ.சா.5 ராஜன்பாபு, தனி வட்டாட்சியர் அ.சா.6 செந்தில்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். 29.11.2019 ம் தேதி 1 ம் எதிரி மீது மட்டும் 448, 294 (b), 506 (2). 323 of IPC r/w 3(1)(r), 3(2)(va) ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

அ.சா.1 அமுதா என்பவரால் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தேதி தெரியாது. அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை 02.08.2019 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். புகார் கொடுக்கப்பட்டதற்கும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்கும், 313 நாட்கள் காலதாமதம் உள்ளது என்றால் தவறு. அ.சா.ஆ.1 புகார் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தேதி 23.09.2018 என்று சொன்னால்

சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது 02.08.2019 என்று சொன்னால் சரிதான். புகார் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் நாளிலிருந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய 313 நாட்கள் காலதாமதத்திற்கான விளகத்தினை முதல்தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.10 திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து தங்களுக்கு செயல்முறை ஆணை எந்த தேதியில் எங்களது அலுவலகத்தில் பெறப்பட்டது என்றால் 05.08.2019 ம் தேதியன்று பெற்றேன். அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கையில் சாதியின் பெயரை சொல்லி திட்டியதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கையில் அவ்வாறு சொல்லப்படவில்லைஎன்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.6 ஆகியவற்றில் படித்து பார்த்தேன், படிக்க கேட்டேன் என்ற வாசகம் இடம்பெறவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கையில் காலம் எண் 12 இல் வரிசை எண் 18 இல் கடந்த 26.03.2018 ல் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று வாசகம் உள்ளது. அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அ.சா.2 மனோகர், சம்பவம் நடந்த இடத்தில் இருந்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சிகளை மறு விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விதிகளின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று சொன்னால், விதிவிலக்கு உண்டு. காலதாமதமாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதற்கு விளக்கம் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளின் மீது எந்த முகாந்திரமும் இல்லாமல் இவ்வழக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன இடத்தில்,சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு

செல்லாமலும், சரிவர புலன் விசாரணை செய்யாமலும், எதிரிகளின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த இறுதியறிக்கை சட்டப்படி நிலைநிற்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.23 17:49:33 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.